RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20312

# பெருங்கதையில் பெண்களின் ஆடையும் அணிகலன்களும்

## ம.இரா.தேவி மீனாட்சி [அ,*]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), திண்டல், ஈரோடு - 638012, தமிழ்நாடு, இந்தியா.

# Women's attire and costumes in the Perungathai

## M.R. Devi Meenakshi [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women, Thindal, Erode-638 012, Tamil Nadu, India.

* Corresponding Author: meenaganeslikes@gmail.com

Received : 28-02-2020
Accepted : 31-05-2020

**ABSTRACT**

Tamil literature is the epitome of the great ideas of our ancient Tamils. Literature is a country's time glass. In which people can connect with them in order to progress. The societal changes in a country's artistic environment are reflected in the local literature. The Epic literature is to highlight the importance of women in their clothing and ornaments. The women's in the **Perungathai** are the beautiful women who come before our eyes. The prosperity of a country is determined by the women living in the country. Women's who lived happily with dresses, ornaments and Savor flowers. Therefore, the dress and costume of the female protagonists in **Perungathai** are very special and imitated by the present generation.

**Keywords:** Perungathai, Attire, Costumes

## ஆசிரியர் குறிப்பு

ம.இரா.தேவி மீனாட்சி அவர்கள் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். பதினாறுக்கும் மேற்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளர். இலக்கணம், தற்கால இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

## ஆய்வுச்சுருக்கம்

தொன்மைச் சிறப்புமிக்க நம் தமிழரின் உயரிய சிந்தனைகளைத் தமிழ் இலக்கியங்களே பறை சாற்றும்! இலக்கியங்கள் ஒரு நாட்டின் காலக்கண்ணாடி. மக்கள் முன்னேற்றத்திற்குத் தக்கவாறு அவர்களோடு இணைத்து அதில் காண முடியும் - ஒரு

நாட்டுக் கலைச்சூழலில் ஏற்படும் சமுதாய மாற்றங்களை அந்நாட்டு இலக்கியங்களில் எதிரொலிக்கின்றன - காப்பிய இலக்கியங்கள் உலா வரும் பெண்கள் தங்களுடைய ஆடை அணிகலன்களில் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்ததனைப் பட்ம பிடித்துக் காட்டுவதே. - பெருங்கதையின் கதை மாந்தர்களில் கற்பனை நயத்தோடு அழகு சொரூபமாக நம் மனக்கண் முன் நிற்பவர்கள் அதில் வரும் பெண் மக்களே. ஒரு நாட்டின் செல்வச் செழிப்பினை அந்நாட்டில் வாழும் பெண் மக்களைக் கொண்டே நிர்ணயப்படுத்துகின்றனர் - ஆடை அணிகலன்கள் ஆசைக்கு வாச மலர்கள் என்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்தர்கள் பெண்கள் - ஆகவே பெருங்கதையில் வாழும் பெண் பாத்திரங்களின் ஆடை, அணிகலன் இன்றைய தலைமுறையினரும் பின்பற்றும் வகையில் அமைந்துள்ளமை மிக்கச் சிறப்பிற்குரியது.

## முன்னுரை

பொய்யகல நாளும் புகழ் விளைத்தல் என்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொளிநீர் - கையகலக்
கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முற் றோன்றி மூத்தகுடி.

தமிழரின் தோற்றத்தினைப் புறப்பொருள் வெண்பா மாலையில் சுட்டுகிறார் ஐயனாரிதனார் (Jawarlal, 2010). தொன்மைச் சிறப்புமிக்க நம் தமிழரின் உயரிய சிந்தனைகளைத் தமிழ் இலக்கியங்களே பறை சாற்றும்! இலக்கியங்கள் ஒரு நாட்டின் காலக்கண்ணாடி. மக்கள் முன்னேற்றத்திற்குத் தக்கவாறு அவர்களோடு இணைத்து அதில் காண முடியும். ஒரு நாட்டுக் கலைச்சூழலில் ஏற்படும் சமுதாய மாற்றங்களை அந்நாட்டு இலக்கியங்களில் எதிரொலிக்கின்றன. காப்பிய இலக்கியங்கள் உலா வரும் பெண்கள் தங்களுடைய ஆடை அணிகலன்களில் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்ததனைப் பட்ம பிடித்துக் காட்டுவதே அவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

## பெருங்கதை

கொடிக்கோ சம்பிக் கோமானாகிய
வடித்தேர்த் தானை வத்தவன் தன்னை
வஞ்சஞ் செய்துழி வான்றளை விடிஇய
உஞ்சையிற் றோன்றிய யூகி அந்தணன்
உருவுக் கொவ்வா உறுநோய் கண்டு (மணிமேகலை 15-66–6)

என்று சீத்தலைச்சாத்தனார் பெருங்கதையின் சிறப்பினை எடுத்துக்கூறுகிறார். பெருங்கதையின் கதை மாந்தர்களில் கற்பனை நயத்தோடு அழகு சொரூபமாக நம் மனக்கண் முன் நிற்பவர்கள் அதில் வரும் பெண் மக்களே. ஒரு நாட்டின் செல்வச் செழிப்பினை அந்நாட்டில் வாழும் பெண் மக்களைக் கொண்டே நிர்ணயப்படுத்துகின்றனர் (Devira, 2017). ஆடை அணிகலன்கள் ஆசைக்கு வாச மலர்கள் என்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்தர்கள் பெண்கள்.

ஆகவே பெருங்கதையில் வாழும் பெண் பாத்திரங்களின் ஆடை, அணிகலன் இன்றைய தலைமுறையினரும் பின்பற்றும் வகையில் அமைந்துள்ளமை மிக்கச் சிறப்பிற்குரியது.

## அழகு

இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் பெண்களின் அழகைப் பாடாத புலவர்கள் இல்லை. பெண்களை வெறுத்தவர்கள் கூட அவர்களின் அழகை, ஆடை, அணிகலன்களை வர்ணித்து அதன் அழகில் மயங்காதிருக்க வேண்டும் எனப் பாடல்கள் இயற்றியுள்ளனர். மதனமஞ்சிகையின் அழகினை இவ்வாறு பாடுகிறார் (Chithalai Saathanar,1949; Swaminatha Iyer, 2012)

துதைபூங் கோதை சுமத்த லாற்றா
மதர்மா னோக்கின் மாதாஞ் சாயற்
பதரில் பணிமொழிப் பனைத்தோட் சின்னுதல்
மதர்வை நோக்கின் மானமஞ்சிகை 3 (பெருங்கதை 17: 22- 74)

## பெண்களின் முகம்

பெருங்கதையில் உதயணனின் மனைவியையும் பிரச்சோதனனின் தேவியரையும், ஆருணி மன்னனின் மனைவி, தோழியர், பணிப்பெண்கள் எனக்கதை மகளிர் பலர் உள்ளனர். இலக்கியத்தில் வரும் மகளிரின் முகத்தை

"திலதஞ் சுடரும் திருமதி வாண்முகம்" (3:5;23)
"தாமரை எள்ளிய காமரு திருமுகம்" (2:4: 126) எனப் பாடியுள்ளனர்.

## நுதழ்

"பனிப்பிறை அழித்த பழமைத் தாகிய
அணித்தகு சிறுநுதழ்" ( 2:16: 22-23) எனக் கூறியுள்ளனர்.

## ஆடைகள்

"உண்பவை நாழி உடுப்பவை இரண்டே
பிறவு மெல்லாம் ஓரொக்கும்மே"

என்ற புறநானூற்று இலக்கியத்தின்படி பெண்களின் அழகிற்கு அழகு சேர்ப்பது அவர்கள் அணியும் ஆடைகள். சங்க காலத்தில் தமிழகத்தில் நெசவுத் தொழில் முக்கிய பங்கு வகித்தது பெருங்கதை.

## மகளிர் அணிந்த ஆடைகளின் வகைகள்

### நுண்கதிர்

மென்மையும், வெண்மையும் கொண்ட அவை பாற்கடலில் பனி நாளில் எழுந்த ஆவி போன்று இருந்தன. ஆவி நுண் துகில் (1: 36-64)

### நூல் துகில்

பருந்தி, பட்டு, நார் ஆகியன கொண்டு மிக நுண்மையாக நெய்யப்பட்டன. 'நூலினும் உலண்டினும் நாரினும் இயன்றன' (1: 42: 210)

### பட்டுடை

"பட்டுடைத் தானை.......'

"பட்டியல் கலிங்கம்" (1: 37: 156) எனப் பட்டுடையைப் பெருங்கதையில் பாடி உள்ளனர்.

### பூந்துகில்

"பூந்துகில் தானை........................

புது நூற் புந்துகில்" (1:42:145) என பூ வேலைப்பாடமைந்த ஆடையைச் சங்கமகளிர் அணிந்ததாக கூறியுள்ளனர்.

### கோடித்துகில்

புத்தாடைகள் "கோடித் துகில்" என வழங்கப்பட்டது.

### வண்ணத்துகில்

ஆடைகள் பல வண்ணங்களில் அணியப்பட்டன. வெள்ளைத் துணியில் நீலம், மரகத நிறம், பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களை ஏற்றினர்.

இதனை

"அறுவைக் கோதிய ஐவகை வண்ணத்துத்
துறைவிதி நுனித்த தூத்தொழிலாளர்" (2::5:128 -129)

என்று வண்ணம் தோய்ப' பதில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் குறிப்பிடுகிறார்.

மேலும் பாம்பின் தோல் போன்ற வடிவில் உடையதாகவும், மூங்கிலின் உட்பக்கத் தோலைப் போன்று மெல்லிய ஆடையையும் அணிந்தனர். ஆடைகள் புகையைப் போல மென்மையும் தொய்வையும் உடையதாக அமைந்தன. என்ற இலக்கிய நடையின் மூலம் அறியலாம். இவ்வாறு நெய்யப்படும் ஆடைகள் பின்வருமாறு பாதுகாக்கப் படுகின்றன.

## காடி யூட்டல்

ஆடையில் விரைப்பும், மடமடப்பும், மடிப்பு கலையாமல் இருக்கவும் காடி என்ற கஞ்சியைப் பயன்படுத்தியமை சலவை செய்து பயன்படுத்துயமையைக் காடி கொண்ட கழுவுறு கலிங்கம் என்று கூறியுள்ளார்.

## மணமூட்டல்

உடலுக்கு நறுமணம் கலந்த பொடிகளைப் பயன்படுத்துவதைப் போல ஆடைகளுக்கும் பயன்படுத்தினர் என்பதை நறுமடி என்று சிலப்பதிகாரமும், நறும் புகை ஊட்டியமையை.

“காடிக் கலந்த கோடிக் கலிங்கம்
கழும வூட்டுங் காழகில் நறும்புகை” ( 1:54: 9-10)
என்ற அடிகள் மூலம் அறியலாம்.

## மடித்தல்

கஞ்சியிட்டு, நறுமணம் ஊட்டப்பட்ட ஆடைகள் அழகிய பேழைகளில் மடித்து வைத்து பாதுகாக்கப்பட்டன.

## ஆடைகள் அணியும் முறைகள்

## மேலாடை

பெண்கள் மேலே போர்த்திய ஆடை முன்றனை எனப்பட்டது. இஃது உடுத்திய ஆடையின் எஞ்சியப் பகுதியாக கழுத்தைச் சார்ந்து தொங்க விடப்பட்டது.

## கச்சு

மார்பகங்களில் அணிந்து கொண்ட ஆடைகள் இவை வண்ணமூட்டியதாகவும் பூ வேலைப்பாடு கொண்டதாகவும், வண்ண மிகு கற்கள் பதிக்கப்பட்டும் இருந்தன என்பதைக் கச்சியாப் புறுத்த கால்வீங் கிளைமுலை என்ற அடிகளால் அறியலாம்.

## வட்டுடை

முழங்கால் அளவுக்கு உடுத்தப்படும் ஆடை. உள்ளாடையாக அணியப்பட்டது.

## தழையுடை

பட்டாலும், பருத்தியாலும் ஆன நயமிக்க ஆடை அணிந்த மகளிர் பசிய இளந்தளிர்களுக்கு இடையே பல வண்ணப் பூக்களைப் புனைந்து தழையுடையை அணிந்தனர்.

நொச்சி இலைகள், அசோக இலைகள், வயலை கொடிகளைக் களையும் ஆம்பல், நெய்தல் மலர்களையும் இவ்வாறு அணிந்தனர் எனக் கொங்கு வேளிர் குறிப்பிடுகின்றார்.

## வாசவதத்தைக்கு

"மராஅந் நுணரும் மாவின் தழையும்
குராஅம் பாவையும் கொங்கவிழ் முல்லையும்
பிண்டித் தளிரும் பிறவும் இன்னவை
கொண்டியான் வந்தேன்" என உதயணன் குறிப்பிடுகின்றான்.

ஆடை வகைகளும் அணியும் முறையும் சங்ககாலம் போலவே பெருங்கதை காலத்திலும் வழக்ககாக இருந்தது என்பதை இதன் மூலம் அறியலாம்.

## அணிகலன்கள்

சங்க மகளிர் அழகுக்கு அழகு சேர்க்கும் விதமாக ஆடைகள் மட்டுமின்றி அணிகலன்களும் முக்கிய பங்கு வகித்தன. அணிகலன் என்பதற்கு ஆபரணம், நகை, பூண், அணி, தடையம், பணி, கலன் இழை எனப் பல பெயர்கள் உண்டு.

"கம்மியர் புனைந்த காமர் பல்கலம்
செம்மையின் அணியும்" (1:42: 213- 314)

என்ற இலக்கிய நடையின் மூலம் இதனை அறியலாம். அடி முதல் முடிவரை ஆயிழையார் முத்தாலும், வைரங்களாலும், மாணிக்கக் கற்களையும் கொண்டு பலவித அணிகலன்களை அணிந்தனர் அவை பின்;வருமாறு.

## கால் அணிகலன்

'கிண்கிண்' இது பொன்னால் செய்யப்பட்டது. அடி எடுத்து வைக்கும் போது அசைந்தாடி "கிண்கிண்" என ஓசை எழுப்பும்.

## சிலம்பு

சிவந்த தாமரைப் பாதங்களில் அணிந்த மற்றொரு அணி சிலம்பு. இதனை மையமாக வைத்து "சிலப்பதிகாரம்" என்ற காப்பியமே உருவானது. சிலம்பினில் மாணிக்கக்கற்களும், முத்துக்களும் பரல்களாகப் பயன்படுத்தப்பட்டன (Samythaiar, 2017).

## காடி

பாடகம் என்பதும் கால்களில் அணியப்படும் ஓர் வகை அணி. பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை எனப் பல வகையான அணியை இலக்கிய மகளிர் அணிந்தனர்.

## இடை அணிகலன்

### மேகலை

இடையில் அணிந்த அணிகலன்களுள்; சிறந்தது மேகலை. மணியும், பவளமும் அணி பெற அழகிய வேலைப்பாட்டுடன் பாம்புரி போல் முன்புறம் வளைந்து காணப்படும். இவ்வணிக்குப் படுகால் என்ற வேறு பெயரும் உண்டு.

### பாண்டில்

மேகலை வகையைச் சார்ந்த மற்றொரு அணி. இது வட்டமான பொன்னால் செய்யப்பட்டு பவள மணிகள் கோர்க்கப்பட்டு காணப்படும்.
இதனைப்

"பவழக் காசொடு பன்மணி விரைஇத்
திகழக் கோத்த செம்பொற் பாண்டில்"

எனப் பெருங்கதை அடிகள் விளக்குகின்றன.

தலைவன் பிரிந்து சென்றமையால் வாடிய தலைவியின் இடையில் அணிந்திருந்த "பாண்டில்" இடையோடு பொருந்தாது நழுவியது என ஐங்குறுநூறு "பாண்டிலைக்" குறிப்பிடுகிறது.

### விரிசிகை

விரிசிகை என்பது மேகலை வகையைச் சேர்ந்த மற்றொரு அணி. 32 மணிக் கோவைகளைச் கொண்டது. அதனை 'எண்நால் காழ் நிரை" எனப் புலவர்கள் குறிப்பிடுவர்.
மேகலையின் வகைகள்:

காஞ்சி, மேகலை, கலாபம், பருமம், விரிசிகை ஆகியன மேகலையின் வகைகள். காஞ்சி - எட்டு முத்து வடங்களையும், மேகலை - ஏழு வடங்களையும், கலாபம் பதினாறு வடங்களையும், பருமம் பதினெட்டு வடங்களையும், விரிசிகை முப்பத்திரண்டு வடங்களையும் கொண்டது.

### அல்குல் காசு

மகளிர் பொன் காசுகளைக் கோத்து அல்குலில் அணிந்தனர்.

### அரசிலை

அரசிலை வடிவமாகவும், பொற்காசுகள் பவளக்காசுகள் ஆகியன வற்றையும் அல்குலின் மேல் அணிந்து. அதன் மேல் ஆடைகளை உடுத்தினர்.

சங்க கால மகளிர் இயற்கையோடு இணைந்த வாழ்வை வாழ்ந்தனர். அவர்கள் வாழும் சூழலுக்கேற்ப திருமண முறைகள் மாறுபட்டன.

திருமண நாளன்று மகளிர் மங்கல நீராடி மஞ்சள் அணிந்து புதுத்தாலி புனையும் வழக்கம் இருந்தது. தங்கம், வைரம், மாணிக்கம், முத்துக்களால் மாதறு பொன்னால் உருவாக்கப்பட்ட கோர்க்கப்பட்ட தாலியை மணமகள் கழுத்தில் அணிவிப்பான். அது மங்கல நாண் எனவும் வழங்கப்படும்.

## ஒற்றைவடம்

மார்புக்கு இடையே அமையுமாறு ஒற்றை முத்து வடத்தை அணிந்தனர். அவை ஏகவல்லி எனவும் அழைக்கப்பட்டது. அதனுடன் பலவகையான மணிகள், மாணிக்ககற்கலால் அமைந்த பொன் ஆரங்களை அணிந்தனர். பொன் மணிகளாலான பல ஆபரணங்களை அணிந்தமையால் அதன் கணத்தைச் சுமக்க முடியாமல் 'ஒரு பிடி' அளவுடைய இடை வருந்தியதாக பின்வரும் பெருங்கதை பாடல் விளக்குகிறது.

"சுண்ண இலேகை வண்ணம் சிதைய
மண்ணிய நித்தில வடத்தொடு புரளும்
பல்கலஞ் சுமத்தல் ஆற்றாது பையென
ஒல்குபு நுடங்கும் ஒரு பிடி நுசும்பினர்" .

## கழுத்து அணிகலன்

களிகை என்ற கழுத்தணி, முத்துச்சரம், பன்மணிகளும் இழைத்த அணிகலன்கள், தாலி, முத்து வடம், பொன்நாண், சங்கிலி, பொன்னாரம் எனப் பலவகையான அணிகலன்களை இலக்கியப் பெண்கள் அணிந்தனர்.

புருடராகம், வைடூரியம், கோமேதகம் ஆகிய மும்மணிகளாலான மும்மணிக்காசு என்ற அணியையும், பலவகை மணிகள் கோர்க்கப்பட்ட தாலியையும் அணிந்தனர். தாமரை மலர் வடிவத்தில் அமைந்த மாலையையும், வண்டொழுங்கு போன்ற மணிகளை நிரல்படப் பதித்து இடை இடையே மடக்கிய இலை உருவம் கொண்ட மாலையை அணிந்து அழகுக்கு அழகு சேர்த்தனர்.

## கை அணிகலன்

## வளை

இலக்கியத்தில் மகளிர் பவளம், சங்கு, பொன் போன்றவற்றாலான அணிகலனை அணிந்தனர். கைகள் முழுவதும் நிறைந்து ஒலி எழுப்பும் வகையில் வளையல்களை அணிந்தனர்.

## கடகம்

இது மகரமீன் கவ்விய கொடி வடிவத்தில் காணப்படும்.

## சூடகம்

இதுவும் கையில் அணியும் அணி.

## மோதிரம்

கை விரல்களில் அணியும் நகைகளில் ஒன்று. இதனை அங்குலி என்றும் வழங்குவர். பெயர்கள் பொறிக்கப்பட்ட "நாம மோதிரத்தையும்' "முடக்கு மோதிரம்" "இரத்தின கற்கள்" பதித்த மோதிரம் எனப் பலவகையான அணியில் அணிந்தனர். இதனை

"வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரல் கொள்இய செங்கேழ் விளக்கத்து"

என்ற பாடலின் மூலம் அறியலாம்

## காது அணிகலன்

## குழை

பண்டைக் காலங்களில் இளம் பெண்கள் இளம் தளிர்க்களைக் குழைகளாக காதில் அணிவர். இலக்கிய மகளிர் வீட்டு வாசலில் உலர்த்தப்பட்ட நெல்லைத் திண்பதற்கு வந்த கோழிகளை தம் காதணியான குழைகளைக் கழற்றி எறிந்து துரத்தினர் என இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

## ஓலை

குழை, இலை, பூந்தோடு, ஓலைச்சுருள் ஆகியவற்றைக் காதில் அணிந்தமையால் அவ்வடிவத்திலேயே அணிகலனை உருவாக்கினர்.

## கடிப்பு

காதில் அணிந்த ஓர் அணி கடிப்பு இஃது இந்திர நீலத்தையும் இடையிடையே வைர மணிகளையும் அழுத்திச் செய்யப்பட்டது. இதற்குக் குதம்பை என்ற வேறு பெயரும் உண்டு இதனைச்

சூடுறு பொன்வினைச் சுவணர் புனைந்த
தோடும் கடிப்பும் துளங்கு காதினர்"

என்ற கொங்கு வேளிர் பாடலின் மூலம் அறியலாம்.

## தலை அணிகலன்

## நெற்றிச்சுட்டி

மரகத மீன் வடிவத்திலும், திலகம் என்னும் பொன் அணியும் நெற்றியில் தொங்கமாறு சங்க மகளிர் அணிந்தனர். இன்றும் கேரளத்திலும், கன்னியாகுமரியிலும் பொன்னால் செய்யப்பட்ட திலகத்தைச் சீதனமாக தருகின்றனர்.

## கூந்தல் பட்டம்

மகளிர் தங்கள் கூந்தலை வட்டமாக கொண்டையிட்டு அதைச் சுற்றியும் அகன்ற மல்லிகையை அணிந்தனர். அம்மலரைச் சுற்றி செம்பொன்னாலான பட்டத்தைச் சூடினர். இத்தகைய கவின்மிகு காட்சியை

"மறுவகத் தடக்கிய மதியம் போலச்
சிறுமுகச் சிகழிகை புடைமுதல் புதைஇய"

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

## பொன்னரிமாலை

கூந்தலைக் கொண்டையாக முடிக்காமல் தொங்க விடும் போது அதன் மீது பொன்னாலான "பொன்னரிமாலை" என்ற அணியை அணிந்தனர்.

## சூளாமணி

சூளாமணி என்பது மணிகள் இழைத்து வில்லையாகச் செய்யப் பெற்ற தலையணி ஆகும். தலையின் பின்புறம் பிடரியின் இருபுறமும் வலது இடது எனப் பல்லி வடிவத்தில் "புல்லகம்" என்ற அணியை அணிந்தனர். பட்டம், பொன்னரி மாலை என்ற அணியையும் தலையில் அணிந்தனர் எனப் பெருங்கதை விளக்குகிறது.

இவ்வாறாக பெண்களின் அழகுக்கு அழகு சேர்க்க அவர்கள் அணிந்தவை கடல், மலை, நிலத்தில் தோன்றிய பல்வேறு பொருட்களை அழகுக்கு அழகூட்டும் பொருள்களாக அணிந்தனர். பெருங்கதையின் கதைக்கு வடநாட்டிற்கு சொந்தமானது.

## முடிவுரை

கதைக்கு விளக்கப்படும் பண்பாடு தமிழ் நாட்டுக்கு உரியது. கதைக்கு அவர் சேர, சோழ பாண்டிய நாட்டுப் பின்னணியைத் தந்துள்ளார். அவர் கதையில் கூறியுள்ள அணிகலன்கள், ஆடைகள் அனைத்தும் தமிழகப் பெண்டிர் அணிந்ததே. சங்க இலக்கியத்திலும், சிலப்பிலும் காணப்படும் அணிக்கலன்களையே பெருங்கதையிலும் கூறப்பட்டுள்ளது. அணியும் முறையிலும் சங்ககால நிலையே பெருங்கதைக் காலத்திலும் நீடித்திருக்கிறது.

## References

Chithalai Saathanar, (1949), Manimegalai, Fourth Edition, Venus Printing Press, Chennai, India.

Devira, (2017), Purapporul Venba Maalai - Devira Urai, Sri Nandhini Pathippagam, Chennai.

Jawarlal, K.G., (2010) Silappathikaram, Kizhakku Pathippagam, Chennai.

Samythaiar, V.V., (2017), Perungathai, digital library India, https://archive.org/details/in.ernet.dli.2015.384392/mode/2up

Swaminatha Iyer, U.V., (2012), Perungathai, Amudha Nilayam, Chennai.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License